## தாக்குதல் அறிகுறிகள்

- இளஞ்சிவப்பு காய்ப்பழுக்களின் தாக்கம் பருத்தி பூக்கும் சமயத்தில் தொடங்கி அறுவடையின் இறுதிவரை நீடிக்கும். இளம் புழுக்கள் மகரந்தம் மற்றும் சூல்பை முதலியவற்றை உண்டு சேதப்படுத்தும். இதனால் தாக்கப்பட்ட பூக்கள் விரியாமல் நுனிகள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொண்டு ரோஜா மலரின் மொட்டுகள் போன்ற தோற்றமளிக்கும். இது இளஞ்சிவப்பு காய்ப்பழுவின் தாக்குதலுக்கான அறிகுறியாகும்.
- புழுக்கள் இளம் மொட்டுகளைத் தாக்கும்பொழுது அவை உதிர்ந்துவிடும். பூக்களை தாக்கிய இளம்புழுக்கள் அதன்பின் இளம் பிஞ்சுகளை தாக்கி அதனுள் வளரும் விதைகளை உண்ணும். ஒரு காயினுள் ஒன்றுக்கும் மேற்பட்ட புழுக்கள் காணப்படலாம். இளஞ்சிவப்பு காய்ப்புழுக்களால் தாக்கப்பட்ட காய்களில் மேற்பகுதியில் சிறிய துளைகள் காணப்படும். நாளடைவில் புழு உள்நுழைந்த தடம் காயின் வளர்ச்சியால் மறைந்துவிடும்.
- இளஞ்சிவப்பு காய்ப்புழுக்கள் மேற்கொள்ளும் காயின் உள்ளறை நகர்வுகள்மூலம், உள்ளறைகளின் இடைச்சுவர்களில் வட்ட வடிவிலான துளைகள் காணப்படும்.
- இளஞ்சிவப்பு காய்ப்புழுவால் தாக்கப்பட்ட காய்கள் முறையாக திறக்காது. இதில் காணப்படும் விதைகளும், பஞ்சும் புழுவினால் தாக்கப்பட்டிருக்கும்.
- இளஞ்சிவப்பு காய்ப்புழுவின் தாக்குதல் அதிகமாக ஏற்படும் பொழுது காய் அழுகல் நோய் ஏற்படக்கூடும்.
- இப்புழுக்கள் விதைகளை உண்பதால் அதன் முளைக்கும் திறன் குறையும். புழுவின் தாக்கம் விதைகளில் இருந்து பெறப்படும் எண்ணெயின் அளவையும், தரத்தையும் பாதிக்கிறது.



சேதமடைந்த மலர்கள்



சேதமடைந்த காய்கள்

நிதி உதவி :
மத்திய அரசின் வணிகப் பயிர்களுக்கான
தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்
பூச்சிக்கொல்லி எதிர்ப்பு திறன் மேலாண்மை மற்றும்
இளஞ்சிவப்பு காய்ப்புழு கட்டுப்பாட்டு உத்திகள்

ஆக்கம் :
கு. ரமேஷ், ர. பிரமோத் குமார்,
வ. பாலகிருஷ்ணன், ஏ. ஹெச். பிரகாஷ்

மேலும் விபரங்களுக்கு : முனைவர். ஏ. ஹெச். பிரகாஷ்
திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் தலைவர்,
மத்திய பருத்தி ஆராய்ச்சி நிறுவனம்
மண்டல நிலையம், கோயம்புத்தூர் - 641 003

வெளியீடு : முனைவர். வி. என். வாக்மாரே,
இயக்குனர், மத்திய பருத்தி ஆராய்ச்சி நிறுவனம்,
நாக்பூர் - 440 010

# பருத்தி இளஞ்சிவப்பு காய்ப்புழு சேதம் மற்றும் தாக்குதல் அறிகுறிகள்



இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம்
மத்திய பருத்தி ஆராய்ச்சி நிறுவனம்
மண்டல நிலையம்
கோயம்புத்தூர் - 641 003

## சேதம் மற்றும் தாக்குதலின் அறிகுறிகள்

இளஞ்சிவப்பு காய்ப்புழு பருத்திச் செடிகளைத் தாக்கும் முக்கிய பூச்சிகளில் ஒன்றாகும். இதன் தாக்கம் உலக அளவில் பருத்தி பயிரிடும் அனைத்து பகுதிகளிலும் காணப்படுகிறது. இப்புழுவின் தாக்குதலால் பருத்தியில் 10 முதல் 30 சதவிகித மகசூல் இழப்பு ஏற்படும். இப்பூச்சியின் பெரும்பாலான வளர்ச்சிப்பருவம் தாக்கப்பட்ட பூ மற்றும் காய்களுக்குள்ளே நடைபெறுவதால் இவற்றை கட்டுப்படுத்த தெளிக்கப்படும் பூச்சிக்கொல்லிகளாலும், மற்ற இயற்கை எதிரிகளாலும் மிகக் குறைவான அளவிலேயே பாதிப்பு ஏற்படுகிறது. மேலும், இளஞ்சிவப்பு காய்ப்புழுக்களால் ஏற்படும் தாக்கத்தை காய்கள் திறந்த பின்னர் மட்டுமே கண்டறிய இயலும் என்பதால் அதன் சேதத்தை மதிப்பிட்டு பூச்சி கட்டுப்பாட்டிற்கான நடைமுறைகளை உடனடியாக செயல்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே இளஞ்சிவப்பு காய்ப்புழு மேலாண்மையின் முதல்படி இப்பூச்சியின் பல்வேறு வாழ்க்கை சுழற்சி நிலைகளை அடையாளம் காணுதல் மற்றும் அதன் தாக்குதல் அறிகுறிகளை கண்டறிவதாகும்.



## வாழ்க்கை சுழற்சி

### முட்டை

இளஞ்சிவப்பு காய்ப்புழுவின் தாய் அந்துப்பூச்சி மொட்டு, காய், இலை மற்றும் தண்டு ஆகியவற்றில் முட்டையிடும். முட்டைகள் வெள்ளை நிறத்தில், 0.5 மில்லி மீட்டர் நீளமாகவும், 0.25 மில்லி மீட்டர் அகலமாகவும், செதுக்கியது போன்ற வரிகளை கொண்டிருக்கும். முட்டைகள் மிகச் சிறிதாக இருக்கும் என்பதால் அவற்றை உருப்பெருக்கி சாதனங்கள் இன்றி பாப்பது சற்று கடினம். முட்டை பருவம் 4 முதல் 5 நாட்கள் வரை நீடிக்கும்.



### புழு

முட்டையிலிருந்து வெளிவந்த இளம்புழுக்கள் வெள்ளை நிறத்திலும் பழுப்பு நிற தலையையும் கொண்டிருக்கும். இவை பூக்களை உண்ணும். வளர்ந்த புழுக்கள் இளஞ்சிவப்பு நிறத்திலும், பழுப்பு நிற தலையையும் கொண்டிருக்கும். இவை காயை துளைத்து விதைகளை உண்ணும்.



### கூட்டுப்புழு

கூட்டுப்புழுக்கள் பழுப்பு நிறத்தில் 7 முதல் 8 மில்லி மீட்டர் நீளமாக இருக்கும். இவை பெரும்பாலும் செடிகளுக்கு அருகாமையிலுள்ள மண்ணின் மேற்பரப்பிலோ அல்லது மண்ணினுள் 50 மில்லி மீட்டர் ஆழத்திலோ காணப்படும். சில நேரங்களில் விதைகளுக்குள்ளும் கூட்டுப்புழுக்கள் காணப்படும்.



### அந்துப்பூச்சி

அந்துப்பூச்சி சிறியதாகவும், பழுப்பு நிறத்திலும், முன் இறக்கையில் ஒரு கரும்புள்ளியும், பின் இறக்கையில் சாம்பல் நிறத்துடனும் இருக்கும். தாய் அந்துப்பூச்சிகள் அதன் வாழ்க்கை பருவத்தில் மொத்தம் 200 முதல் 400 முட்டைகள் வரை இடும். அந்துப்பூச்சிகள் இரண்டு முதல் மூன்று வாரம் வரை உயிர்வாழும்.

